பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 09 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட தரமான கல்வி மிகவும் முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. தூய்மையான மற்றும் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

3. பீகாரில் தொடர் கனமழை காரணமாக பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

4. சவுதி அரேபியாவுக்கு 500 கோடி டாலர் மதிப்பிலான ராணுவ தளவாடங்களை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்பதல் அளித்துள்ளது.

5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மான்சி சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட தரமான கல்வி மிகவும் முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கி பேசிய அவர், அரசியல் சாசனத்தின் அடிப்படையில் சம வாய்ப்புகள் வழங்க கல்வி இன்றியமையாதது என்று கூறினார்.

ஆசிரியர்களின் பங்களிப்பு காரணமாக பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றல் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கு கல்வி, திறன் வளர்ச்சி, தொழில்முனைவோர் திறன் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி அறிவு மூலம் இந்தியாவை உலக அளவில் திறன்மிகு நாடாக மாற்ற முடியும் என்று அவர் கூறினார்.

மகளிர் உரிமைகள் மற்றும் கல்விக்காக போராடிய**Savitri Bai Phule** -வின் பங்கை அப்போது அவர் நினைவுகூர்ந்தார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தில் இருந்து வந்த குழந்தைகள் கல்வி மூலம் முன்னேற்றமடைந்ததை திருமதி திரௌபதி முர்மு சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய கல்வி அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, இணையமைச்சர்கள் திரு ஜெயந்த் சிங், டாக்டர் சுகந்தா மஜூம்தார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

தூய்மையான ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

தூய்மையே சேவை இயக்கம் தொடர்பாக மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் மற்றும் துறை அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த ஆண்டு தூய்மையே சேவை இயக்கம் வரும் 17-ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை நடைபெறும் என்று கூறியுள்ளார்.

தூய்மையே சேவை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று திரு மனோகர்லால் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி எரிவாயுத் திட்டங்களுக்கு விண்ணப்பம் எதுவும் வரவில்லை என்ற செய்திகளை மத்திய நிலக்கரி அமைச்சகம் மறுத்துள்ளது.

37 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டத்திற்கு நாளை மறுநாள் வரை விண்ணப்பிக்கலாம் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

இதுவரை Talcher உர நிறுவனம், தேசிய அனல்மின் கழகம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இத்திட்டத்துக்காக இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

மெத்தனால், Syngas, அமோனியா, யூரியா உள்ளிட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான இந்த திட்டத்துக்கு கடந்த மே மாதத்தில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

முதல் சுற்று நாளை மறுநாள் முடிவடைய உள்ள நிலையில், வரும் செவ்வாய்க்கிழமையிலிருந்து இரண்டாவது சுற்று விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று மத்திய நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

இந்தியாவில் நீதித்துறை கட்டமைப்பில் கடந்த சில ஆண்டுகளாக சமரச தீர்வு மையங்கள் முக்கிய பங்காற்றுவதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் தலைமை நீதிபதிகள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள வழங்குகளை முடித்து வைப்பதற்கு இந்த தீர்வு மையங்கள் மிகவும் உதவிகரமாக இருப்பதாக தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு சூரியகாந்த் தெரிவித்தார்.

நீதிபதிகள் — வழக்கறிஞர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு, சட்ட ரீதியான பயிற்சி, பன்மொழி அறிவாற்றல் உள்ளிட்டவை இந்தியாவின் நீதித்துறைக்கு வலு சேர்ப்பதாகவும் தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

சட்டம், நீதி மற்றும் சட்டக்கல்வி தொடர்பான மாதாந்திர சொற்பொழிவுகளை நடத்த உச்சநீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் இதனை அறிவித்த தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள், முன்னணி வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள், நிபுணர்கள் மற்றும் சட்டக்கல்வி பயிலும் மாணவர்கள் இந்த சொற்பொழிவில் பங்கேற்று ஆக்கப்பூர்வமான கருத்துகளை பகிர்ந்துகொள்வார்கள் என்று தெரிவித்தார்.

சட்டக்கல்வியின் முக்கியத்துவத்தையம், சட்டம் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கு இது உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

நீதிபதிகளுக்கும், சட்டத்துறை நிபுணர்களுக்கும் இந்த சொற்பொழிவுகள் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பீகார் மாநிலத்தில் தொடர் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் 11 மாவட்டங்களில் பத்து லட்சத்து 26 ஆயிரம் பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாட்னாவில் கங்கை ஆற்றில் உள்ள காந்தி படித்துறையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் மக்கள் அங்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அனைத்து அமைச்சர்களும், அதிகாரிகளும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட முதலமைச்சர் திரு சாம்ராட் சௌத்ரி உத்தரவிட்டுள்ளார்.

கங்கை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் ஆய்வு செய்தார்.

போபாலில் மாநில பேரிடர் மீட்புப் படையின் தலைமையகத்திற்கு சென்ற அவர், ஒவ்வொரு மாவட்டத்தின் மழை நிலவரம் குறித்து ஆய்வு நடத்தினார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் பேரிடர் மீட்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தெலங்கானாவில் புதிய கல்விக்கொள்கையை கொண்டுவர உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

**Kodangal-**ல் ஆசிரியர் தின விழாவில் உரையாற்றிய அவர், கல்விக் கொள்கையை மேம்படுத்த ஆசிரியர்கள் அரசுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார.

மாணவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்த ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

கல்வித்துறையில் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் தெலங்கானாவை முதன்மை மாநிலமாக மாற்ற பணியாற்ற வேண்டும் என்று திரு ரேவந்த் ரெட்டி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

திரிபுராவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் இன்று தொடங்கியன.

முதல்கட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பல்வேறு கட்சி வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

வீடு வீடாக சென்று வாக்காளர்களின் தகவல்களை பெறுவது குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையத்தின் அலுவலர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளனர்.

வரும் 15-ஆம் தேதியிலிருந்து, அக்டோபர் 14-ஆம் தேதிவரை வீடு வீடாக சென்று வாக்காளர்களின் தகவல்கள் பெற உள்ளனர்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று வாக்காளர்களுக்கு படிவங்களை வழங்கி, பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களைப் பெற்று தேர்தல் ஆணையத்தின் செயலியில் பதிவேற்றம் செய்வார்கள்.

அக்டோபர் ஒன்றாம் தேதி, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இறுதி வாக்களார் பட்டியல் டிசம்பர் 23-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சவுதி அரேபியாவுக்கு 500 கோடி டாலர் மதிப்பிலான ராணுவ தளவாடங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்பதல் அளித்துள்ளது.

அமெரிக்க அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழில்நுட்ப மற்றும் போக்குவரத்து உதவிகள் இதில் இடம்பெற்றுள்ளதாக கூறியுள்ளது.

சவுதி அரேபியாவின் பாதுகாப்புக்காக அமெரிக்காவின் வெளியுறவுத்துறை கொள்கையின் அடிப்படையில் இந்த ராணுவ தளவாடங்கள் விற்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

வளைகுடா பகுதியில் பொருளாதார மேம்பாட்டுக்கும், அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் சவுதி அரேபியாவின் பங்கு மிகவும் முக்கியமானது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

<<<<<>>>>>

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மான்சி சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 18-21, 21-18 என்ற செட் கணக்கில், கனடாவின் Rachel Chan-ஐ வென்றார்.

-----------------

ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

------------

**Almaty** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrella Das — Sutirtha Mukherjee** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **11-6, 12-10, 8-11, 11-6** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Diya Chitale — Yashaswini Ghorpade** இணையை வென்றது.

----------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>**